**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 53/2024**

**வாதி தரப்பு சாட்சி–1 காமாட்சி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது சொத்து என நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4, 5 பேர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன், அவர்கள் பெயர் முகில், ஆகாஷ், சியாமளா மற்றும் சிலர். இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால், சுமார் 3 ஏக்கருக்கும் குறைவாக இருக்கும். எனது பெயரில் தாவா சொத்தில் ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

2) எனது கணவர் கருப்பண்ணன் எப்போது கிரையம் வாங்கினார் என்று தெரியுமா என்றால், சுமார் 40 வருடங்கள் இருக்கும். எனது கணவர் அய்யண்ணன் என்பவரிடம் கடன் வாங்கியிருந்தாரா என்றால் இல்லை. அய்யண்ணன் எனது கணவருக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் கடனை வசூல் செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால், எனது கணவருக்குத்தான் தெரியும். மேற்படி கடன் தொகைக்காக அய்யண்ணன் இந்த தாவா சொத்தை ஏலத்தில் எடுத்தாரா என்றால் அதுபற்றி தெரியாது. ஏலத்தில் எடுத்ததன் அடிப்படையில் தாவா சொத்தை அய்யண்ணன் நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் எடுத்துக் கொண்டார் என்றால் அது பொய்யாகும். அய்யண்ணன் தாவா சொத்தை ஏலத்தில் எடுத்தது உண்மையா, பொய்யா என்றால் பொய்யாகும்,

அதுபற்றி எனக்கு தெரியாது. அய்யண்ணன் நீதிமன்றத்தில் ஏலம் எடுத்தது, சுவாதீனம் எடுத்தது உள்ளிட்ட ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் அது அனைத்தும் பொய்யாகும்.

3) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் அய்யண்ணன் ஏலத்தில் எடுத்தது மற்றும் சுவாதீனம் எடுத்தது உண்மை என ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அய்யண்ணன் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை, சுமார் 5 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். அய்யண்ணன் எனது கணவருக்கு ஏதாவது ஆவணம் எழுதிக் கொடுத்தாரா என்றால் இல்லை. அய்யண்ணன் ஆவணம் எழுதிக் கொடுத்ததாக நான் இவ்வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லையா என்றால் இல்லை. அய்யண்ணன் தாவா சொத்தை வெள்ளைச்சாமி என்பவருக்கு விற்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வெள்ளைச்சாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வெள்ளைச்சாமியின் வாரிசு என்றால் சரிதான். வெள்ளைச்சாமிக்கு விற்ற கிரைய ஆவணத்தை எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) தற்போது தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்த போது தாவா சொத்திற்கான பாட்டா யார் பெயரில் உள்ளது என பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், நான் குத்தகைக்கு அனுபவம் செய்து வருவதாக சொல்வது உண்மையா என்றால் பொய்யாகும். நான் அய்யண்ணனிடம் இருந்து தாவா சொத்தை வருடத்திற்கு 5 மூட்டை நெல் கொடுப்பதாக குத்தகைக்கு எடுத்தேனா என்றால் இல்லை, அய்யண்ணனிடம் வாங்கிய கடன் தொகைக்கு வட்டி செலுத்துவதற்காக வருடத்திற்கு 6 மூட்டை நெல் கொடுத்தோம். அய்யண்ணன் கொடுத்த கடனிற்கு ஏதாவது ஆவணம் கொடுத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்தைப் பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு மற்றும்

முதல் சாட்சியத்திற்கு மாறாக எனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அவை உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

5) அய்யண்ணனிடம் இருந்து 17.04.2000ம் தேதியன்று வெள்ளைச்சாமி முறையாக கிரையம் பெற்று, மேற்படி தேதியில் இருந்து வெள்ளைச்சாமி குடும்பத்தார்தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வெள்ளைச்சாமி இறந்த பின்னிட்டு பிரதிவாதிகள்தான் வாரிசு அடிப்படையில் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கும், மற்ற வாதிகளுக்கும் தாவா சொத்தில் எந்தவிதமான உரிமையோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வரும் விபரம் எனக்கும் மற்ற வாதிகளுக்கும் நன்கு தெரியும் என்றால் சரியல்ல. நானும், மற்ற வாதிகளும் பிரதிவாதிகளுக்கு வீண் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக ஆவணம் தயார் செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

6) மேற்படி விபரங்கள் அனைத்தும் என் கணவர் கருப்பண்ணனுக்கு நன்கு தெரியும் என்றும், அவரை விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறாரா என்றால் ஆரோக்கியத்துடன்தான் இருக்கிறார். தாவா சொத்து முழுவதும் அய்யண்ணன் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்ததை அனுசரித்தும், தாவா சொத்திற்கான உண்மை ஆவணங்கள் அய்யண்ணன் பெயரில் முறையாக இருந்ததை பரிசீலனை செய்தும், சட்டப்படி வெள்ளைச்சாமி அய்யண்ணனிடம் இருந்து கிரையம் பெற்று அவரும், அவரது வாரிசுகளும் அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. அய்யண்ணனோ, அவரிடம் கிரையம் பெற்ற வெள்ளைச்சாமியோ, பிரதிவாதிகளோ தாவா சொத்தை யாருக்கும் குத்தகைக்கோ, போகியத்திற்கோ, வட்டிக்கோ விடவில்லை என்றால் சரியல்ல.

**எனவே பொய்யான சங்கதிகளை கொண்ட இவ்வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**